# வள்ளலாரும் காந்தியும்

முனைவர் சி.தேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
9442436396 - devi-tam@sfrcollege.edu.in

DOI 10.5281/zenodo.12735823.

**Abstract :**

Tamil literature is known as sangam literature, Moral literature and devotional literature. These can be used as a yardstick to measure the life of the ancient Tamils. It can be said that the life of the ancient Tamils constitutes the norms for us. There are many people who incarnated on this earth as airs before us and showed light to the world. Prominent among them was Vallalar Peruman, also known as Ramalinga Adikalar. He united the devotees by highlighting the ideology that the Lord is a form of light. He translated it as givakarunya for all living beings in the world. Some of his ideologies are consistent with those of Mahatma Gandhi. Vallalar has adopted four types of morals which help in leading a happy life. This type of teaching has also been given to us by Gandhiji. The aim here is to bring together the statements of the two witnesses.

Key Words : Gandhiji - Vallalar - Non-killing - Virtue and morality

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழுக்கே உரிய இலக்கியம் சங்க இலக்கியம், நீதிஇலக்கியம், பக்திஇலக்கியம் என்று புகழப்படும் தன்மை உள்ளது. இவை பண்டைத்தமிழரின் வாழ்வியலை அளக்க உதவும் அளவுகோல் எனலாம். பண்டைத்தமிழரின் வாழ்வியலே நமக்கான நெறிகளாக அமைகிறது எனலாம். நம் முன்னத்தி ஏர்களாக இந்த பூமியில் அவதரித்து உலகிற்கு ஒளிகாட்டியவர்கள் பலர். அவர்களில் முக்கியமானவர் இராமலிங்க அடிகளார் என்றழைக்கப்படும் வள்ளலார் பெருமான். இவர் இறைவன் ஒளிவடிவானவன் என்ற சித்தாந்தத்தை முன்னிலைப்படுத்தி பக்தர்களை ஒருங்கிணைத்தார். உலக உயிர்கள் அனைத்திற்குமான ஜீவகாருண்யம் என்பதை மொழிந்தார். இவரது சித்தாந்தங்கள் சில உத்தமர் காந்தி மகானின் கொள்கைகளோடு ஒத்துப்போகின்றது. வள்ளலார் இன்ப வாழ்விற்கு உதவும் நான்கு வகையான ஒழுக்கங்களை எடுத்தியம்பியுள்ளார். இந்நால் வகை போதனை


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

காந்தியடிகள் மூலமும் நமக்குக்கிட்டியுள்ளது. இரண்டு சான்றோர்களின் கூற்றுக்களை ஒருங்கே காண்பதே இங்கு நோக்கமாக அமைகிறது.

**இன்ப வாழ்வுக்கு வழியாகும் நான்கு ஒழுக்கம்**

பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரதநாடு என்று புகழப்பட்ட நம் தேசத்திலே, நமக்கு பார் போற்றும் வகையில் பலர் வாழ்ந்து வழிகாட்டிச் சென்றுள்ளனர். பாரததேச மக்கள் இன்றும் செம்மாந்த செயல்கள் சில செய்வதற்கு அடித்தளம் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய நமது சான்றோர்கள். நம் முன்னோர்களும் அவர்கள் காட்டிய நெறிகளும் நம்மை செதுக்கிய உளிகள் எனலாம். தமிழுக்கே உரிய இலக்கியம் சங்க இலக்கியம், நீதிஇலக்கியம், பக்தி இலக்கியம் என்று புகழப்படும் தன்மை உள்ளது. இவை பண்டைத்தமிழரின் வாழ்வியலை அளக்க உதவும் அளவுகோல் எனலாம். பண்டைத்தமிழரின் வாழ்வியலே நமக்கான நெறிகளாக அமைகிறது எனலாம்.

நம் முன்னத்தி ஏர்களாக இந்த பூமியில் அவதரித்து உலகிற்கு ஒளிகாட்டியவர்கள் பலர். அவர்களில் முக்கியமானவர் இராமலிங்க அடிகளார் என்றழைக்கப்படும் வள்ளலார் பெருமான். இவர் இறைவன் ஒளிவடிவானவன் என்ற சித்தாந்தத்தை முன்னிலைப்படுத்தி பக்தர்களை ஒருங்கிணைத்தார். உலக உயிர்கள் அனைத்திற்குமான ஜீவகாருண்யம் என்பதை மொழிந்தார். இவரது சித்தாந்தங்கள்சில உத்தமர் காந்தி மகானின் கொள்கைகளோடு ஒத்துப்போகின்றது. வள்ளலார் இன்ப வாழ்விற்கு உதவும் நான்கு வகையான ஒழுக்கங்களை எடுத்தியம்பியுள்ளார். இந்நால் வகை போதனை காந்தியடிகள் மூலமும் நமக்குக்கிட்டியுள்ளது. இரண்டு சான்றோர்களின் கூற்றுக்களை ஒருங்கே காண்பதே இங்கு நோக்கமாக அமைகிறது.

**இன்பவாழ்வுக்கு வழியாகும் நான்கு ஒழுக்கம்**

மகிழ்வான வாழ்விற்கு வள்ளலார்

1. **இந்திரிய ஒழுக்கம்**
2. **கரண ஒழுக்கம்**
3. **ஜீவஒழுக்கம்**
4. **ஆன்மஒழுக்கம்**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்று நான்கு வகை ஒழுக்கத்தை எடுத்தியம்பியுள்ளார்.

**இந்திரிய ஒழுக்கம்**

இந்திரிய ஒழுக்கம் என்பது கன்ம இந்திரிய ஒழுக்கம், ஞான இந்திரிய ஒழுக்கம் என்று இரண்டு வகைப்படும். இந்திரிய ஒழுக்கம் என்பதற்கு, கேடுதரும் சொற்கள் நம் செவியில் புகாதபடி இறை நாமத்தைக் கேட்பது, குரூரமாகப் பார்க்காமலிருப்பது, சுவையை விரும்பாமல் இருப்பது, இனிமையாகப் பேசுவது, மிதமாக உண்பது,உயிர்வதை நிகழும் போது அதைத் தடுப்பது என்று விளக்கம் கொடுக்கப்படுகின்றது. வள்ளலார் உப்பு, புளி, காரம் அனைத்தையும் குறைப்பது நல்லது என்று எடுத்துக்கூறியுள்ளார். அதன் வழிவந்தவராய் காந்தியடிகளும் ருசியற்ற உணவினைப் பரிந்துரை செய்கிறார்.

இதை நாம் எளிமையாகப் புரியவேண்டுமென்றால் சக உயிரிடம் காட்டும் அன்பு, புலனடக்கம், கொல்லாமை என்று விளக்கலாம்.

இந்திரிய ஒழுக்கத்தில் தலையாயது புலனடக்கம் ஆகும். "புலனைந்தனையும் அடக்கியவன் வீரமே வீரன்" 1 என்று வள்ளுவர் இயம்பிய காரணத்தால் இராணுவத்தில் உள்ளவர்களுக்கும் இக்கொள்கை கற்பிக்கப்படுகிறது. வள்ளலாரின் வழிநின்று காந்தியடிகளும் ஐம்புலனடக்கம் பற்றி விளக்கியுள்ளார். "முக்கியமாக மனிதனின் நாக்குதான் அதிக பாவத்தைச் செய்கிறதென்று காந்திஜி கருதுகிறார். நாக்கை அடக்கி ஆள்பவன் எளிதாக மற்றப்புலன்களை அடக்கி விடலாம். இதையே " எவனொவன் தன்னுடைய நாக்கு ருசிகளை அடக்கி ஆள்கிறானோ அவனால் இந்திரிய நிக்ரஹம் செய்ய முடியும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன்." 2 என்று காந்திஜி கூறுகிறார். (மகாத்மாவின் மகாவிரதங்கள் ப. 70) என்று காந்தியடிகள் புலனடக்கத்தை இயம்பியுள்ளார். இதை அடியொற்றியே காந்தியக்கவிஞர் கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்றார்.

சாத்வீக குணத்தோடு வாழ்வதற்கு எளிமையான சைவ உணவுகள் அவசியம் என்பதை வள்ளலார் சுட்டுகிறார். இதை தாவர உணவு, சாத்வீக உணவு, என்றழைக்கிறார். அசைவம் கோபம், குரோதம், காமம் போன்ற உணர்வுகளை வளர்க்கும் என்பது அவரது கருத்து.


http://Creativecommons.org//license/by/4.0/.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" 3 (மணிமேகலை) என்று போற்றப்படுவதுண்டு. "உடம்பைப் போஷித்து வளர்ப்பது உணவுதான்.அதனால் தான் உயிர் எனப்படுகிறது"4 (மகாத்மா காந்தி நூல்கள் தொகுதி 4. ப.23) என்கிறார் மகாத்மா.உணவு என்பது சுகானுபவத்திற்கு அல்ல என்றும் குறிப்பிடுகிறார்.உணவு என்பது உடம்பு வளர தேய்மானத்தைத்தடுக்க, தசை நார்கள் வளர்க்க உதவுவது. எனவே இயற்கை உணவு, எளிய உணவு,சைவ உணவு மேலானது என்பது காந்தியடிகளின் கருத்து.

புலனடக்கம், கோபம் கொள்ளாமை, பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல் அனைத்து ஜீவகாருண்ய செயல்பாடுகளும் அகிம்சையின் பாற்பட்டது எனலாம்.

வள்ளலார் சமய வழிபாட்டில் இருந்த பலியிடலைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணினார். அதன் காரணமாகவே சிறு தெய்வ வழிபாடு கூடாது என்றார்.

காந்தியடிகளும் அகிம்சைக்கான புறஇலக்கணம் கூறுமிடத்து, உயிர்க்கொலை, கடுஞ்சொற்கள் சொல்வது, தீய எண்ணம், வெறுப்புணர்ச்சிக்கொடுமை, மனித உயிர்களையும், விலங்குகளையும் சித்திரவதை செய்தல், எளியோரை வருத்துதல், சுரண்டல் ஆகியன இல்லாதிருத்தலும் அகிம்சையின் பாற்படும் என்கிறார்.

**கரண ஒழுக்கம்**

மன ஒருமைப்பாடு, பிறர் குற்றம் காணாமல் இருப்பது, கோபம் கொள்ளாமல் இருப்பது, சத்துவகுணத்;தோடு இருத்தல்,நேர்மை உண்மையோடு வாழ்தல். மனஒருமைப்பாடு என்பது மிகவும் அவசியம் என்பதை வள்ளலாரின் கூற்றுகள் வழி கண்டறிகிறோம்.

"பிறப்பு இறப்பு எவ்வுயிர்க்கும் பொதுவாகினும் சிறப்பு மனிதரின் அன்பு" என்றார் வள்ளலார்.

இத்தகைய அன்பு நிறைந்த சத்துவ குணம்நிறை வாழ்வு கைவரப்பெற மன ஒருமைப்பாடும் தேவை. அன்னை விசாரம், அதுவே விசாரம் என்ற வாழ்விலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஆத்மவிசாரம் செய்ய முற்படும்பொழுது உயரிய கோட்பாட்டினராய் வாழமுடியும் என்பதற்கு ஓர் உயரிய சான்றாய் வாழ்ந்தவர் காந்தியடிகள்.

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பைத்தரும்"** (குறள் 138)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்பதற்கேற்ப இலக்கினை அடைய உதவும் தன்மையுடையதாக மன ஒருமைப்பாடு போன்ற குணங்கள் அமைந்திருக்கின்றன எனலாம்.

**ஜீவ ஒழுக்கம்;**

அனைவரிடமும்ஜாதி, சமயம், பேதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திரபந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர்,தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி சமமாகப் பாவித்தல்

**"நால் வருணம், ஆசிரம், ஆசாரம் முதலா**
**நவின்ற கலை சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே" (திருவருட்பா 85)**

என்றும்,

**" சாதியும் மதமும் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெரும் ஜோதி" (திருஅகவல்)**

என்றும் மொழிந்துள்ளார் வள்ளலார்.

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல்" (திருவருட்பா4)நடத்த வேண்டும் என்றார். சாதிகள் இருப்பது ஆன்மீகம் மற்றும் தேசிய வளர்சசிக்கு தடையாக இருக்கும். சாதிகள் ஒழிந்தால் தான் தீண்டாமை ஒழியும் என்றார் காந்தியடிகள். நீரின் தன்மை எங்கிருந்தாலும் ஒன்றே, அதைக் குவளையால் மாற்ற முடியாது. அதே போல ஜீவன் ஒனறு தான். தை மதம், ஊர், ஜாதி என்ற எந்தப் பாத்திரமும பாதிக்கக்கூடாது. அதே சமயத்தில் பாத்திரம் இல்லாமல் நீரை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் முடியும். என்று சமய சன்மார்க்கம் காந்தீயத்தின் வழி எடுத்தியம்பப்பட்டது.

**ஆன்ம ஒழுக்கம்**

உலக உயிர்களின் உடலே ஆலயம் என்றிருத்தல். அனைத்து உயிர்கள் பாலும் அன்பு காட்டு, உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற அன்பு வழிச்சிந்தனைகள் யாவும் இதன்பாற்படும்.

**"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்முயிர்போல் எண்ணிஉள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**யாவர் அவர் உளந்தான் சுத்த**

**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான் தெரிந்தேன்"**

**(திருவருட்பா 5298).** என்றார் வள்ளலார்.

தனிமனித வாழ்க்கையின் ஒரு பண்பாக எண்ணப்பட்ட அன்பு-அகிம்சை, சமுதாயப் போர்க்கருவியாக உருவெடுத்தது. தீமையை, தீமையினாலன்றி அன்பினாலேயே எதிர்க்க காந்தியடிகள் வழி கண்டுபிடித்தார். அதுவே பிற்காலத்தில் சத்தியாகிரகமாக உருக்கொண்டது.

குணம் தரும பலன

ஏம சித்தி(பாதுகாப்பு)

சாகாக்கல்வி(சுவர்ணதேகம்,பிரணவதேகம்,ஞானதேகம் கிட்டும்)

கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்

தத்துவ நிக்கிரகம் எனும் நான்கு பலனும் கிட்டும்.

கடவுள் நிலை என்பது ஏழு பரிமாணம் கொண்டது. எந்த ஒரு பொருளாக இருந்தாலும் நமக்குத் தெரிந்தது முப்பரிமாணநிலை மட்டும் தான். அப்பொருளின் நீளம், அகலம், உயரம் என்பதாகும். முப்பரிமாணத்தைத் தாண்டி நான்காவது பரிமாணம் கொண்ட பொருள் இருப்பதாக யாரும் எண்ணவில்லை. ஆனால் மொத்தம் ஏழு பரிமாண நிலை இருப்பதாக மெய்ஞானிகள் கூறுகின்றனர். அந்த ஏழு பரிமாண நிலைகளையும் கடந்ததுதான் இறைநிலை. நினைந்து நினைந்து என்று துவங்கும் திருஅருட்பா பாடலை உள்ளார்ந்து பாடுபவர் ஏழு நிலையும் கடந்த எட்டாநிலை இறைவனைக் காண இயலும் என்கிறார் வள்ளலார்.

தத்துவம் என்றால் குணம், நிக்கிரகம் என்றால் அழித்தல். அதாவது நாம் கடவுள்மயமாகி விட்ட பின்பு நமக்கென்று எந்த ஒரு குணமும் இல்லாது, இறைவனால் அக்குணங்கள் அழிக்கப்படும். நம்மிடம் இறைகுணங்கள் மட்டுமே தழைத்தோங்கும். சுத்த சன்மார்க்க ஒழுக்கங்கள் ஒருவாறு முற்றுப் பெற்றது. ஆனால் இன்னொரு முக்கியமான ஒழுக்கம் ஒன்றுள்ளது. அது இல்லையேல் மேற்கண்ட நான்கு ஒழுக்கத்தையும் நிறைவேற்ற முடியாது. நிறைவேறவில்லையெனில் நான்கு புருஷர்த்தங்களும் கிடைக்காது. இந்திரிய ஒழுக்கமும் கரண ஒழுக்கமும் நம்முடைய தீவிர முயற்சியால் வெற்றி காண இயலக்கூடியவை. ஆனால் ஜீவ ஒழுக்கமும் ஆன்ம ஒழுக்கமும்


http://Creativecommons.org//license/by/4.0/.

இறைவனின் அருள் இல்லாது அதனருகே நாம் செல்ல இயலாது. இறைவனின் அருள் கிடைக்க ஜீவகாருண்ய ஒழுக்கமே அடிப்படை. இந்த ஒழுக்கத்தின் துணைகொண்டு இறை அருளைப் பெற்ற பின்புதான் ஜீவ, ஆன்ம ஒழுக்கங்களை நம்மால் பூரத்திசெய்ய முடியும். எனவே, ஜீவகாருண்ய ஒழுக்கம் மிகமிக முக்கியம் ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்ற வள்ளலாரின் வாக்கு சத்திய வாக்கு ஆகும். தத்துவ நிக்கரகம் என்று இயம்பப்பட்டிருப்பது காந்தியடிகளின் கொல்லாமை, அகிம்சை, சைவஉணவுமுறைப் பயன்பாடு என்ற சிந்தனைகளோடு ஒத்துப்போகின்றன.

இந்த மகான்களின் நெறியில் நாம் வாழ்வதே நமக்கு நன்மை பயப்பதாகும். மனிதர்கள் செய்யும் தவறுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஆசையே என்றார் வள்ளலவார் தன்னை மறந்து இறைத்தாளினைச் சென்று சேரும் போது யான் எனது என்ற உடைமைப்பற்று உள்ளபடியே நீங்கிவிடும் என்றார் காந்தியடிகள். இந்நெறிப்படி வாழ்ந்தால் நான்கு குணம் நல்கும் பலன் நிச்சயம் கிட்டும்.

**“ பக்தியினாலே இந்தப்**
**பாரினிலெய்திடும் மேன்மைகள் கேளடி**
**சித்தங்தெளியும் இங்கு**
**செய்கையனைத்திலும் செம்மைபிறந்திடும்**
**வித்தைகள் சேரும் நல்ல**
**வீரறவு கிடைக்கும் மனத்திடைத்**
**தத்துவ முண்டாகும் நெஞ்சிற**
**சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும்”**

**(பாரதியார் கவிதைகள்-ஞானப்பாடல்கள் பகுதி 2)**

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப பிறருக்கு துன்பமில்லாத, இன்பமான வாழ்வு பெற வள்ளல் பெருந்தகை வழங்கிய நான்கும் மனதில் நிற்க வேண்டும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

**துணைநின்றவை:**

1. திருவருட்பா, இராமலிங்க வள்ளலார்.
2. மகாத்மாவின் மகாவிரதங்கள்
3. மணிமேகலை
4. மகாத்மா காந்தி நூல்கள் தொகுதி 4.
5. திருஅகவல், இராமலிங்க வள்ளலார்.
6. பாரதியார் கவிதைகள்



http://Creativecommons.org//license/by/4.0/.